# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

## தொழிற்சாலைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்ட முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களை நீக்குதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 19.1.12015 முதல் இணைய வழி மூலமாக இசைவாணை வழங்கும் நடைமுறையினை அறிமுகப்படுத்தி அதன் மூலம் இசைவாணை வழங்குதல் மற்றும் இசைவாணை புதுப்பித்தல் நடவடிக்கைகளை வழங்கி வருகின்றது. இதன் மூலம் தொழிற்சாலைகள் இசைவாணைக்கான விண்ணப்பங்கள் மற்றும் இசைவாணைகளை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை இணைய வழி மூலம் அனுப்பவும், வாரிய அதிகாரிகள், பெறப்பட்ட விண்ணப்பங்களில் கூடுதல் விவரங்கள் அல்லது திருத்தங்கள் ஏதும் தொழிற்சாலைகள் செய்ய வேண்டும் எனில் விண்ணப்பத்தினை தொழிற்சாலைகளுக்கு திருப்பி அனுப்பவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருப்பி அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் பெரும்பாலும், தொழிற்சாலைகளால் உரிய திருத்தங்கள் அல்லது கூடுதல் விவரங்கள் வழங்கப்பட்டு வாரியத்திற்கு மீண்டும் அனுப்பப்படுகின்றன. ஆனால் சில தொழிற்சாலைகள் திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் திருத்தங்கள் செய்யாமலும் மற்றும் மீண்டும் வாரியத்திற்கு அனுப்பாமலும் உள்ளதால் இவ்வகையான விண்ணப்பங்கள் வாரியத்தில் நீண்ட காலம் நிலுவையில் இருப்பதாக கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது, இணைய வழி மூலம் பெறப்படுகின்ற விண்ணப்பங்களை ஆராய்ந்து, இசைவாணை வழங்குவதற்கு உண்டான கால அளவுகளை வகுத்துள்ளது. எனவே தொழிற்சாலைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், தொழிற்சாலைகள் வசம் 15 நாட்களுக்கு மேல் நிலுவையில் இருப்பின், விண்ணப்பப்படிவங்களை மீள சமர்ப்பிக்க அத்தொழிற்சாலைகளுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக கேட்டுக் கொள்ளப்படும். நடுத்தர மற்றும் சிறு வகையான தொழிற்சாலைகளுக்கு, விண்ணப்பப்படிவங்கள் திருப்பி அனுப்பப்பட்ட 15–வது நாள், 30–வது நாள், 45–வது நாள் மற்றும் 60–வது நாட்களில் விண்ணப்பப்படிவங்களை மீள சமர்ப்பிப்பதற்கான நினைவூட்டல்கள் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும். நடுத்தர மற்றும் சிறு வகையான தொழிற்சாலைகள் விண்ணப்படிவங்களை

76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 22353134, 22353135, 22353136, 22353137, 22353138, 22353139, 22353140, 22353141
Fax : 044-22353068
Email : tnpcb@md3.vsnl.net.in Web : www.tnpcb.gov.in

திரும்ப அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை 60 நாட்கள் வரை எடுக்க வில்லையெனில் 61–வது நாள் அந்த விண்ணப்பப்படிவங்கள் மென்பொருளால் தானாக நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது போன்று பெரிய வகையான தொழிற்சாலைகளுக்கு, விண்ணப்பப்படிவங்களை மீள சமர்ப்பிப்பதற்கான நினைவூட்டல்கள், விண்ணப்பப்படிவங்கள் திருப்பி அனுப்பப்பட்ட 15–வது நாள், 30–வது நாள், 45–வது நாள், 60–வது நாள், 75–வது நாள் மற்றும் 90–வது நாட்களில் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும். பெரிய வகையான தொழிற்சாலைகள், திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் மீது 90 நாட்கள் வரை நடவடிக்கை ஏதும் எடுக்க வில்லையெனில், அவ்வகையான விண்ணப்பங்கள் 91–வது நாள் மென்பொருளால் தானாகவே நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் தொழிற்சாலைகளால் விண்ணப்பப்படிவத்துடன் செலுத்தப்பட்ட இசைவாணைக்கான கட்டணம் திருப்பி அளிக்கப்படாததோடு இசைவாணையின்றி இயங்கும் அத்தொழிற்சாலைகள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இத்தொழிற்சாலைகள் இசைவாணை பெறவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பினால், மீண்டும் புதிதாக விண்ணப்பங்களை இணைய வழி மூலம் உரிய இசைவாணை கட்டணத்தோடு சமர்ப்பிக்க வேண்டும். இந்த நடைமுறையானது நவம்பர் 10 ஆம் தேதி 2017 முதல் நடைமுறைக்கு வரும்.

ஒப்பம்/––
உறுப்பினர் செயலர்

உறுப்பினர் செயலருக்காக,



76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 22353134, 22353135, 22353136, 22353137, 22353138, 22353139, 22353140, 22353141
Fax : 044-22353068
Email : tnpcb@md3.vsnl.net.in Web : www.tnpcb.gov.in

# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

## PRESS RELEASE FOR DELETION OF RETURNED APPLICATION

TNPC Board has launched Online Consent Management and Monitoring system (OCMMS) on 19.1.15, to process and issue consent/ renewal consent orders through online. In this system, the industries can make applications for obtaining consent/ renewal consent orders online and the TNPC Board officials may have the provision for returning the applications to the industries if any additional particulars or corrections are required in the applications. While returning such applications, most of the industries resubmit the applications after corrections or with required additional particulars for further processing. However some are not doing so promptly and applications are shown pending for a long time with the Board.

The TNPC Board has stipulated guidelines for processing and issuing of consent orders within specific time-limit. Hence, if the applications are pending with Industries for more than 15 days after returning, SMS/e-mail alerts will be sent to Industries for resubmission of application for every 15 days (15/30/45/60) in case of medium and small scale industries and (15/30/45/60/75/90) in case of Large scale industries. If the industries are not responding for the reminders even after 60 days (medium and small scale) from the date of returning, on 61$^{st}$ day and 90 days from the date of returning (Large scale industries) on 91$^{st}$ day, such applications will be deleted from OCMMS and the consent fees paid for that application will be forfeited and necessary action will be initiated against such industries for operating without consent/renewal. Further, if such industries wish to obtain consent/renewal, they will have to make fresh application through OCMMS along with necessary fee. This procedure will come effect from 10th of November 2017.

Sd/xxx
CHAIRMAN
FOR CHAIRMAN

6/11/17

76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 22353134, 22353135, 22353136, 22353137, 22353138, 22353139, 22353140, 22353141
Fax : 044-22353068
Email : tnpcb@md3.vsnl.net.in Web : www.tnpcb.gov.in